பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 14 திங்கட்கிழமை (26.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 93

# இராணுவ ரீதியில் புலிகளை வெல்ல முடியாது

## இலங்கைக்கு அமெரிக்கா எடுத்துரைப்பு

## நிலைமை இப்போது மோசம் என்றும் எச்சரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 26

**இலங்கையில் நிலைமை மோசமான கட்டத்தை (சீரியஸ்) அடைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, புலிகளைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என இலங்கைக்குச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து விட முடியாது என்றும் தெரிவித்திருக்கின்றது.**

கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கே இவ்வாறு அமெரிக்கத் தரப்பில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

கொழும்பில் இருந்தவாறு இந்தியச் செய்தி நிறுவனமான ஐ.ஏ.என். எஸ்ஸுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இழுபட்டுவரும் தமிழரின் பிரிவினைக் கோரிக்கைப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு மூலம் முடிவு காணலாம் என்று இலங்கைத் தரப்பில் கருதப்படுவதைத் தாம் ஏற்றுக்கொள்ளவேயில்லை என அமெரிக்கத் தூதுவர் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

சிறுபான்மையினரான தமிழர்களின் சட்டரீதியான அபிலாஷைகளை நிறைவு செய்யும் அதிகாரப் பகிர்வு மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான எந்தப் பேச்சுகளுக்கும் அடிப்படையாக அமையமுடியும் என்பதையும் இந்தப் பேட்டியில் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தினார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் மூன்று படையினர் காயம்

கொழும்பு,பெப்.26

முகமாலை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் படையினர் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலையடுத்து படையினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டனர்.

பின்னர் படையினர் நடத்திய தேடுதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் ஊடகநிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் நாடுகளுடன் இந்தியாவும் இணையும்

### ஜனாதிபதியை இப்படி எச்சரித்தாராம் மங்கள

கொழும்பு,பெப். 26

''தேசியப் பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வொன்றை முன்வைக்காமலும் மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்காமலும் இலங்கை அரசு காலத்தைக் கடத்திச் சென்றால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் ஏற்படும். இலங்கைக்கு எதிராகத் தடை விதிக்க இந்தியா மேற்கு நாடுகளுடன் ஒன்று சேரலாம்.

- இவ்வாறு மங்கள சமரவீர வெளி விவகார அமைச்சராக இருந்தபோதே ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மங்கள ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அக்கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இலங்கை உடனடியாக முன்வைக்க வேண்டும் என்று இந்தியா கூறிவருகின்றது. அத்தோடு இலங்கையில் இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்ப் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டவேண்டும் என்றும் அது கூறிவருகிறது.

இது தொடர்பாக இந்திய மத்திய அரசிற்கு தமிழ் நாடு தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்துவருகிறது. 2006 நவம்பர் மாதம் இந்திய பிரதமருக்கும் உங்களுக்கும்

(04ஆம் பக்கம் பார்க்க)

## தன்னாட்சி அதிகாரசபை யோசனைப்படி சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

### அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் வலியுறுத்து

கொழும்பு,பெப். 26

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமானால் அரசு விடுதலைப்புலிகளுடன் நிபந்தனை இன்றியும், தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையிலும் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சை முன்னெடுக்கவேண்டும். இல்லையெனில் இந்த ஆட்சி மாறவேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்திருக்கிறார். கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஆள்கடத்தல், கொலைகள் என்பன தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக தமிழ்மக்களே இதில் பெருமளவில் பாதிப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## அங்கீகரிக்கப்பட்ட முகவர்களே எரிபொருள்களை விற்கமுடியும்

### ஏனையோர் விற்பனை செய்தால் பறிமுதல்

யாழ்ப்பாணம்,பெப்.26

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகர்கள் மட்டுமே எரிபொருள்களை விற்பனை செய்யமுடியும். அவர்களைத் தவிர்த்து வேறு எவரும் எரிபொருள்களை விற்பனை செய்தால் அவை பறிமுதல் செய்யப்படும் என்று அரச அதிபர் எச்சரித்துள்ளார்.

எரிபொருள்களை விற்பனை செய்வதற்கு முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள்களை அந்த முகவர்கள் தவிர வேறு எவரும் விற்பனை செய்யமுடியாது.

முகவர்கள் தவிர்ந்த வேறு எவராவது எரிபொருள்களை விற்பனை செய்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் - என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

## ஆஸியில் புலிகள் தடை குறித்து இலங்கை அரசு பேச்சு நடத்தும்

கொழும்பு, பெப். 26

ஆஸ்திரேலியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட ரீதியாகத் தடைசெய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி அந்தநாட்டு அரசுடன்இலங்கை அரசு பேச்சு நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் சுகாதார அமைச்சர் சிறிபால டி சில்வா தலைமையிலான அமைச்சுப் பிரதிநிதிகள் குழு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமென அறியமுடிகின்றது.

ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதமர் உட்பட அரச அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகளின் தடைகுறித்து இக்குழுவினர் பேச்சு நடத்துவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுகளின்போது புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றியும் தற்போதைய இலங்கை சமாதான முயற்சிகள் குறித்தும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும், புலிகள் அமைப்பை சட்ட ரீதியாகத் தடைசெய்யவேண்டிய அவசியம் குறித்தும் குழுவினர் தமது நிலைப்பாட்டை விளக்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்விஜயத்தின்போது ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை மக்களுடன் சந்திப்பொன்றையும் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறியமுடிகிறது. (க)

## சகல வர்த்தக நிலையங்களும் பற்றுச்சீட்டு வழங்க ஏற்பாடு

### நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் உள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் தமது பெயர் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் பொருள்களின் விலைகளையும் திகதியையும் குறிப்பிட்டு ஒப்பமிட்டு பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இதுவரை பற்றுச்சீட்டுக்கள் இல்லாத வர்த்தக நிலையங்கள் அவற்றை அச்சிட்டு உரிய முறையில் அவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவர்.

இதனைக் கண்காணித்து நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொறுப்பை வர்த்தகர் சங்கம் ஏற்றுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களும் ஏனைய பாவனைப் பொருள்களும் கட்டுப்பாட்டு விலைகளிலும் நிர்ணயிக்கப்பட்ட உரிய விலைகளிலும் மக்களுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து, ஆராயும் விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

மக்களுக்குரிய பொருள்களை நினைத்த நினைத்தவாறு அதிக விலையில் விற்பனை

(04ஆம் பக்கம் பார்க்க)

## படகில் சென்ற 85 இலங்கையரை திருப்பி அனுப்புகிறது ஆஸ்திரேலியா

கொழும்பு,பெப்.26

அரசியல் தஞ்சம்கோரி ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற 85 இலங்கையர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையில் ஆஸ்திரேலிய அரசு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை இந்தோனேஷியா அரசிடம் கையளித்து இந்தோனேஷியாவின் ஊடாக இலங்கைக்கு அனுப்ப ஆஸ்திரேலிய அரசு முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவிலிருந்து 85 இலங்கையர்களும் 02 இந்தோனேஷியர்களும் அரசியல் தஞ்சம் கோரி கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றனர்.

ஆனால், அவர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கி ஆஸ்திரேலிய பெரு நிலப்பரப்பிற்குள் அனுமதிக்கமுடியாது என்று ஆஸ்திரேலிய அரசு தெரிவித்தது.

அத்தோடு இவர்களைக் கைதுசெய்த ஆஸ்திரேலியக் கடற்படையினர் கப்பல் ஒன்றில் இவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த நிலையில் இவர்களை மீண்டும் தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகங்கள் இணைப்பு: தவறான தகவல்; நம்பவேண்டாம்

### பிரதி உயர்கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,பெப். 26

''கிழக்குப் பல்கலைக்கழகத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. இவற்றை எக்காரணம் கொண்டும் நம்பவேண்டாம்.''

- இவ்வாறு உயர்கல்விப் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்திருக்கிறார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''கடந்த இரண்டு நாள்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழத்துடன் இணைக்கப் போகின்றார்கள் என்ற செய்தியொன்று வெளியிடப்

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தென்மராட்சியில் விஞ்ஞானப் பரீட்சை

தென்மராட்சி,பெப்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞானமும் தொழில் நுட் பமும் பாட முதலாம் அலகுப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

பரீட்சைக்குரிய வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**ரம்மியா பிரதீபன்**

(ரம்மி)

மலர்வு
15.10.2004

உதிர்வு
27.01.2007

எத்தனை செல்வங்கள் வந்தாலும்
எத்தனை இன்பங்கள் தந்தாலும்
அத்தனையும் உனக்கு நிகராகுமா?
இத்தனையும் இருந்தும் அரும்பெரும்
சொத்தாகிய செல்வமே நீ இல்லையே!

மாவுசந்தி,அல்வாய்.
(58444)

பிரதீபன் (அப்பா),
ஜெயமனா (அம்மா).


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

860 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் **22 36 38 46**

23-02-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5746417 - 5761708

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,544 | 10/- | 3,385,440/- |
| 2 இலக்கங்கள் | 31,047 | 20/- | 620,940/- |
| 1 இல. + லக்கினம் | 30,616 | 30/- | 918,480/- |
| 2 இல. + லக்கினம் | 2,889 | 100/- | 288,900/- |
| 3 இலக்கங்கள் | 828 | 500/- | 414,000/- |
| 3 இல. + லக்கினம் | 81 | 5,000/- | 405,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,432,760/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,015 | | 8,456,260/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4876511 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 பெப்ரவரி 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொம்பனித்தெரு, கொழும்பு 02

அபிவிருத்தி அதிர்ஷடம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 5757165-1-60 |
| அனுராதபுரம் | 5751348-7-81 |
| நுவரெலியா | 5749667-5-72 |
| கம்பஹா | 5747188-0-87 |
| மாத்தளை | 5746716-7-09 |


## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் சனிக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.


## பதவி வெற்றிடம்

★வெளிக்கள உத்தியோகத்தர்கள்
★அலுவலக ஊழியர்கள், வயதெல்லை : 18 - 45 வரை
தகைமை: 1. G.C.E (O/L)
2. மக்களுடன் தொடர்புகொள்ளும் ஆற்றல், பேச்சுத்திறன்.
கொடுப்பனவு : ரூபா 10,000/= இற்கு மேல் கொமிஷன் பெறலாம்.
விண்ணப்பிக்க விரும்புவோர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**PARAMSOTHY MEDICAL CLINIC (P.M.C)**
443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம். 0779172352.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கறுப்புநிற பொமேறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
[8மாதம் நிரம்பியது. சகல தடுப்பூசிகளும் போடப்பட்ட ஆண், பெண்]
தொடர்பு : இல.06, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 0777583635

## Spoken & Grammar

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
அச்சடித்த பாடங்கள் பயிற்சிகள்
O/L, A/L, வெளிநாடு செல்லவுள்ளோர், பாடசாலை விலகியோர்
காலம் 2மாதம்
By: Mr.B.Ruban, (A/L English Teacher & B.B.A)
தொடர்பு: 222 3397 / 0779785749


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின்
மல்லாகம் உப அலுவலக நூலகத்தில்
நூலகராகக் கடமையாற்றும்
திருமதி ஸ்ரீரஜனி அமரசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா நல்லதம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

## மரண அறிவித்தல்

*குட்டித்தம்பி பாஸ்கரன்*



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சமயபுரம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி பா[illegible] [illegible]4.02.2007 [illegible] அகால [illegible] [illegible]ார். [illegible]டித்தம்பி - [illegible] தம்பதியரின் அன்பு மகனும் சந்திரேஸ்வரியின் [illegible]ன்புக்கணவரும் திரிஷிகா, லுதிஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரராஜசிங்கம், துரைசிங்கம், மனோகரன் (பபா), தேவி, மகேஸ்வரி, ரஜனி ஆகியோரின் சகோதரனும் தனேஸ்வரன், ஞானேஸ்வரன் (இணுவில்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று வவுனியா இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சமயபுரம்,
வவுனியா.

மருமக்கள், பெறாமக்கள்,
மு.தயா. (58445)

## பாராட்டு வாழ்த்துக்களும் நன்றிகளும்

1990ஆம் ஆண்டு குரும்பசிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து ஓலைகுடிசைகளிலும் மரநிழல்களிலும் வசித்து வந்த எங்களுக்கு நிம்மதியாக வாழ்வதற்கு வீடுகளையும் ஒரு பொது மண்டபத்தையும் தந்து உதவிய UNHCR நிறுவனப் பொறுப்பதிகாரி உட்பட அங்கு பணிபுரியும் ஒவ்வொரு பணியாளர்களையும் நாம் பாராட்டுவதுடன் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
புத்தூர் வடக்கு.
உதயநிலா சனசமூக நிலையத்தின்
நிர்வாகிகள்.
(58432)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**நாகமுத்து சக்குணபாலா**

(அங்கு ஜேர்மனி)

தாய் மடியில்
05.12.1965

ஆண்டவன் அடியில்
26.02.1994

திதி: 26.02.2007

பதின்மூன்று ஆண்டுகள் கழிந்து
உமது பால் முகம் மறக்க முடியவில்லை
கண்கலங்கி கண்ணீர் வடிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

M.N.மகேந்திரன்,
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
(58441)

## துயர் பகிர்வு

ஏமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி
ஜெயந்தினி ஜனகன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **செல்லையா தங்கராசா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.,
மீசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26
*
12
*
1966



மறைவு
26
*
02
*
2001

**திருமதி மகாலிங்கம் சித்திரா (கலா)**

*பாசமுடன் பார்த்திருந்து*
*பாசமுகம் மறைந்தின்று*
*ஆண்டுகள் ஆறு ஆனதம்மா*
*ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு*
*மீளாத்துயில் கொண்டீரே*
*ஆறவில்லை எம் துயரம்*
*ஆறுதல் அடைய வேண்டுகின்றோம்.*

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(58435)

தகவல்:
மகாலிங்கம்
குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
10
12
1969



இறப்பு
30
11
2006

**குருநாதன் சுதாகரன் (சுதா)**

30.11.2006 அன்று சிவபதமடைந்த அமரர் குருநாதன் சுதாகரன் (சுதா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (27.02.2007)செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கலாசாலை வீதி,
பாரதிபுலம், திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
(58443)

## திருத்தம்

கடந்த 22ஆம் திகதி வெளியான திருமதி கமலேஸ்வரி நித்தியானந்தன் என்பவரின் மரண அறிவித்தலில் -

காலஞ்சென்றவர்களான சிவகுமாரன், புவனேஸ்வரி மற்றும் செல்வகுமாரன் ஆகியோரின் சகோதரி என்று பிரசுரமாகி இருக்கவேண்டும். மற்றும் என்ற சொல் தவறுதலாக விடுபட்டுவிட்டது. இதனால் சம்பந்தப்பட்டவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு வருந்துகின்றோம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15
01
1921



இறப்பு
26
02
2006

**அமரர் சவரிமுத்து தூசைமுத்து**

*அருள் அளித்த முகம் எங்கே?*
*அமுதூட்டிய கரம் எங்கே?*
*வழிகாட்டி வந்தவரே!*
*வாய்புலம்பி நிற்கின்றோம்.*

*ஆழக்கடல் ஓடி*
*அரவணைத்து வளர்த்தவரே*
*ஆண்டு பல சென்றாலும்*
*அலை நடுவில் தெரியுமையா உம் உருவம் எமக்கு.*

எழுவைதீவு,
5ஆம் வட்டாரம்.
தொ.பே:0776446669

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள். (58430)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நகல்: 222 9944

# இராணுவ வெறித்தனப் போக்குக்கு எதிராகத் திரளும் சர்வதேச சமூகம்

மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது இலங்கை இனப்பிரச்சினை. யுத்த நிறுத்த உடன்பாடு எந்நேரமும் முறிந்து போகலாம் என்ற நிலைமை. பிரகடனப்படுத்தப்படாத, 'ஈழப்போர் -IV' இப்போது நிழல் யுத்தமாகத் தீவிரமடைந்து வருகின்றது. அது எந்நேரமும் முழு அளவிலான பெரும் யுத்தமாக வெடிக்கலாம் என்ற ஏதுநிலை சூழ்ந்து வருகின்றது.

இந்தப் பேரழிவு ஆபத்துத் தவிர்க்கப்படவேண்டும். நீதி, நியாயமான அரசியல் அதிகாரப்பகிர்வுத் திட்டம் ஒன்றை சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களுக்கு வழங்குவதன் மூலமே இந்தப் பேராபத்தைத் தவிர்க்க முடியும். இந்த உண்மை நிலையை - மெய்மை யதார்த்தத்தை - சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்திருக்கின்றது. அதனால்தான், இனிமேலும் தாமதிக்காமல் நியாயமான தீர்வுத்திட்டத்தை - நீதியான அரசியல் யோசனைகளை - முன்வையுங்கள் என்ற கடும் அழுத்தத்தை சர்வதேச சமூகம் இலங்கை அரசுமீது செலுத்தத் தொடங்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெல்லலாம் என இலங்கை அரசுத்தரப்பில் ஓர் எண்ணம் மேலோங்கி வருகின்றது. ஆனால் அது சாத்தியமேயல்ல என்ற யதார்த்தத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் புட்டுக்காட்டியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன்மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டலாம் என்ற இலங்கை அரசுத்தரப்புச் சிந்தனையோடு தாம் உடன்படவேயில்லை என்பதைத் தூதுவர் பிளேக் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற தென்னிலங்கையின் சிந்தனைப்போக்கு தமிழர்களுக்கு நியாயத்தை - உரிய உரிமைகளை - வழங்கத் தென்னிலங்கை தயாரில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது என சர்வதேசம் கருதுகிறது. புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து, தமிழர்களின் பேரம்பேசும் வலுவை உடைத்த பின்னர், தான் விரும்பிய அரைகுறைத் தீர்வை தமிழர் மீது திணித்து, சர்வதேசத்தையும் ஏமாற்றி, தனது பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்டலாம் எனக் கனவு காண்கிறது தென்னிலங்கை அரசுத் தலைமை. இத்தகைய நப்பாசையில் - மாயச் சிந்தனையில் - கனவுக்கற்பனையில் - அது மூழ்கியிருப்பதால்தான் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு யோசனைத் திட்டம் ஒன்றை முன்வைப்பதை விடுத்து, இராணுவ நடவடிக்கைப் போக்கில் வெகு தீவிரமாக அது செயற்படுகின்றது.

ஆனால், இந்தப் போக்கு சரிவராது, வெற்றி தராது என்பதை சூசகமாக உணர்த்துகின்றார் அமெரிக்கத் தூதுவர்.

சர்வதேசப் பொலிஸ்காரனாகத் தன்னை வரித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் பிரதிநிதி என்ற முறையில், வழமைபோல - நியாயமான விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்புகளைக் கூட 'பயங்கரவாத இயக்கங்களாக' சித்திரிக்கும் வல்லாதிக்கப் போக்கிலிருந்து - ஏகாதிபத்தியச் சிந்தனையிலிருந்து - தூதுவர் பிளேக்கால் வெளிவர முடியவில்லை. அதன் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை மோசமான பயங்கரவாத அமைப்பாக அவர் வழமைபோன்று விமர்சிக்கின்றார். அதற்கு அப்பால் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னிலங்கை கைக்கொள்ளும் அணுகுமுறை குறித்து அவர் தெரிவிக்கும் கருத்துகள் ஊன்றிக் கவனிக்கத்தக்கவை.

''சமாந்தரமாக அரசியல் தந்திரோபாய நகர்வு இல்லாமல் இராணுவத் தீர்வு சாத்தியமாகும் என்று நான் நம்பவேயில்லை. பயங்கரவாத முறைகளைப் பயன்படுத்தித் தாக்குவதற்கு குறிப்பிடத்தக்களவு வலிமை விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு இருக்கின்றது. அதனை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. எனவே இராணுவத் தந்திரோபாயத்துக்காகப் பெரும் விலையைக் கூடக் கொடுக்கவேண்டியிருக்கும்'' - என எச்சரித்திருக்கிறார் அமெரிக்கத் தூதுவர்.

தூதுவர் குறிப்பிடுவதுபோல தென்னிலங்கை தன்னுடைய இராணுவ வெறித்தனம் மிக்க இந்தத் தவறான அணுகுமுறைக்காகப் பெரும் விலையைக் கொடுப்பதற்குத் தயாரா என்பதே கேள்வி.

தென்னிலங்கை அரசுத்தலைமையின் இத்தகைய இராணுவத் தீவிரப் போக்கு இப்பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியாவிலும் கடும் ஆட்சேபத்தையும், அதிருப்தியையும் கிளப்பியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதுகுறித்து, இப்போது அமைச்சரவையிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டிருக்கும் மங்கள சமரவீர எம். பி., சரியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் - தாம் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய விவரமான, விலாவாரியான கடிதத்தில் தெளிவாக விளக்கியிருந்திருக்கிறார்.

அரசியல் தீர்வில் நாட்டமின்றிச் செயற்படுதல், மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்தல், யுத்த தீவிரப்போக்கில் ஈடுபாடு காட்டுதல் ஆகிய காரணங்களினால் இலங்கை அரசு குறித்து புதுடில்லி ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருப்பதாகவும் -

இலங்கை அரசின் மேற்படி போக்கை ஆட்சேபித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்ற சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து, இந்தியாவும் இலங்கைக்கு எதிராக சில தடைகளை விதிக்க முற்படலாம் எனவும் - கடந்த டிசம்பர் மத்தியில் தாம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்திருக்கின்றார். அந்தக் கடிதத்தின் உள்ளடக்கம் இப்போது பகிரங்கமாகியிருக்கின்றது.

இவை சர்வதேச மட்டத்தில் சிந்தனைப் போக்கு, இலங்கை அரசின் யுத்த வெறித்தனத்துக்கு எதிராக ஒன்று திரண்டு வருவதையே காட்டுகின்றன. இராணுவ வெற்றி மாயையிலும், அடக்குமுறைக் கனவிலும் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை அரசுத் தலைமைக்கு, இவ்வாறு தனக்கு எதிராகத் திரண்டுவரும் சர்வதேச சிந்தனைப் போக்கின் தாக்கம் குறித்து புரிந்துகொள்ள - உணர்ந்து கொள்ள - முடியுமா என்பது சந்தேகமே.

## யாழ். ஆஸ்பத்திரி 'கிளினிக்' சிகிச்சை; நோயாளர் வசதி கருதிய மாற்றங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் 'கிளினிக்' சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு நடத்தப்படவுள்ளன.

இதனால் நோயாளர்கள் பெரும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளர்களின் நன்மை கருதி வைத்தியசாலைக்கு கிளினிக் கிற்கு வரும் நோயாளர்கள் 2 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

கிளினிக் புத்தகத்தில் 'V' என அடையாளம் இடப்படும் நோயாளர்கள் மாதம் ஒரு தடவை வைத்திய அதிகாரிகளால் பரிசோதிக்கப்படுவர். 'R' என அடையாளமிடப்படும் புத்தகம் வைத்திருக்கும் நோயளர்கள் தமக்குரிய மருந்துகளைப் பெற்றுச் செல்லமுடியும். ஆயினும், இந்நோயாளர்கள் விரும்பின் அவர்களும் வைத்திய அதிகாரியால் பரிசோதிக்கப்படுவர்.

புத்தகத்தில் 'R' அடையாளமிடப்பட்ட நோயாளர்கள் தமக்கு வசதியில்லையெனில் அதனை உறவினர் மூலம் அனுப்பி உரிய மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் ஊரடங்கு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகளால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நோயாளர்கள் மற்றும் வைத்தியர்கள், ஊழியர்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே இந்தப் புதிய நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-202-111)

## ப.நோ.கூ.சங்கங்களில் 28 ரூபாவுக்கு குத்தரிசி

யாழ்ப்பாணம்,பெப்.26

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள சிவப்பு குத்தரிசி கிலோ 28 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் ஊடாக இந்த அரிசி விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கூடுதல் விலைக்கு விற்பனைசெய்யும் நடைபாதை வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை

### யாழ். செயலகம் ஏற்பாடு

நடைபாதைகளில் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

நடைபாதையில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்பவர்கள் வேறு வர்த்தகர்கள் சார்பாக விற்பனை செய்வதாகக் காரணம் காட்டுகின்றனர். இக்காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

யாழ். செயலகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையை விடக் கூடுதல் விலைக்கு பொருள்கள் விற்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (1)

## வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறு குழந்தைகள் உணவுகளுக்குத் தட்டுப்பாடு

உடுப்பிட்டி, பெப். 26

வடமராட்சி,தென்மராட்சிப் பிரதேசங்களில் சிறு குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் பிஸ்கற்றுகள் பால்மா வகைகள், ஆகியவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த குழந்தைகள் போசாக்குக் குறைபாட்டால் பாதிப்படைந்து வருவதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

தாய்மாரால் பாலுட்டப்படும் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து மிக்க பிஸ்கற் வகைகள், பால்மா வகைகளுக்குப் பொதுவாகவே குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் அவற்றை சிறிதளவேனும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலை தொடருமானால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த குழந்தைகளின் போசாக்கு மட்டம் பெரும் வீழ்ச்சியடையும் என்று பெற்றோர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.(அ-202-155)

## 'நோராட்' திட்டங்களை பூர்த்தி செய்ய ஜூன் மாதம்வரை கால அவகாசம்

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் 'நோராட்' அமைப்பு மேற்கொள்ளும் திட்டங்களை எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் பூர்த்திசெய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் கே. கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை புனரமைத்தல், நிலத்தடி நீர் குறித்த ஆய்வு, மழை நீரைச் சேமித்தல் ஆகிய திட்டங்களை 'நோராட்' அமைப்பு மேற்கொண்டு வந்தது.

தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக இந்தப் பணிகளை பூர்த்தி செய்யமுடியாத நிலை உருவாகி உள்ளது.

இந்தப் பணிகளைப் பூர்த்தி செய்ய கால அவகாசம் வழங்கும்படி தாம் கோரிக்கை விடுத்ததாகவும் -

எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இந்தப் பணியை பூர்த்தி செய்வதற்கு அந்த அமைப்பு சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## மேலும் மூன்றுவகைப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயம்

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் அத்தியாவசிப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்ட பொருள்களில் புதிதாக மூன்று பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

சைக்கிள் ரயிர் மற்றும் ரியூப், பசளைகள் மற்றும் இரசாயனப் பொருள்கள், கால்நடை உணவுப் பொருள்கள் என்பனவே புதிதாக கட்டுப்பாட்டு விலைகளுக்குரியனவாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் விலை விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளைவிடக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.(அ-1)

## இலங்கை - சீன ராஜீக உறவின் 50 வருட பூர்த்தி விழாவில் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.26

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ராஜீக உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது வருடங்கள் பூர்த்தி அடைவதை ஒட்டிய விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார்.

அவரது சீன விஜயத்தின் போது இடம்பெற உள்ள முக்கிய நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.

இலங்கைக்கும் - சீனாவுக்கும் இடையிலான வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக - பொருளாதார கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது. இதன் காரணமாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின்பிரதிநிதிகளையும், முன்னணி வர்த்தகப் பிரமுகர்களையும் ஜனாதிபதி அழைத்துச் செல்கிறார் என்று கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவினால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் தொடர்பான கூட்டு ஒப்பந்தமும் இங்கு கைச்சாத்திடப்படவுள்ளது.

சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் 100 பேர் செல்கின்றனர். இதற்கென 'ஏயார் லங்கா' நிறுவனத்துக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

இக்குழுவில் 15 சிரேஷ்ட அமைச்சரும் 40இற்கும் அதிகமான வர்த்தகப் பிரமுகர்களும் இடம் பெற்றுள்ளனர். பௌத்த பிக்குமாரின் அணி ஒன்றும் ஜனாதிபதியுடன் செல்கிறது.

அமைச்சர்கள் குழுவில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, மைத்திரிபால சிறிசேன, தினேஸ் குணவர்த்தன. ரோஹித போகொல்லாகம, சரத் அமுனுகம, ஏ.எச்.எம். பௌஸி, அனுர பிரியதர்சன யாப்பா, டலஸ் அழகக்கோன், ஏ.எஸ்.எம். அத்தாவுல்லா, பி.சந்திரசேகரன் ஆகியோருடன் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களான பந்துல பண்டார நாயக்க, மஹிந்த தானந்த அழுத்கமகே ஆகியோர் இடம் பெறுகின்றனர். (ஐ-1)

**நாளை**

மாசி- 15
செவ்வாய்க்கிழமை
27.02.2007
திதி: ஏகாதசி
பின்னிரவு : 02.35
நட்சத்திரம் : திருவாதிரை
மரணம் : 02.03
சுபநேரம் : 10.59 - 12.29
ராகுகாலம் : [illegible]

## சப்ரகமுவ பல்கலை. மூடப்பட்டது

கொழும்பு, பெப். 26

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள வயிற்றோட்ட நோய் காரணமாக பல்கலைக்கழகம் இரண்டுவார காலம் மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் உள்ள 180 மாணவர்களுக்குப் பரவியுள்ள இந்த வயிற்றோட்ட நோய்க்கு காரணம் என்ன என்பதை பரிசோதனைகள்மூலம் அறிய நடவடிக்கை எடுத்துள்ளதாக பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் ரோஹன மஹலியன ஆராய்ச்சி தெரிவித்தார்.

வயிற்றோட்ட நோய் பரவியதற்கு பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் குடிதண்ணீர் காரணம் காரணம் அல்ல. உணவில் ஏதேனும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ - 4)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## தென்மராட்சியில் பயிர்ச் செய்கையில் நாட்டமில்லை

தென்மராட்சி, பெப். 26

பயிர்களுக்குத்தேவையான பசளை மற்றும் கிருமிநாசனிகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் தென்மராட்சி பிரதேச விவசாயிகள் மேட்டு நிலப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்குப் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

பயிர்ச்செய்கைக்கு தேவையான அடிக்கட்டுப் பசளை வகைகளுக்கு குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.அதே போன்று கிருமிநாசனிகளைப் பெற்றுக் கொள்வதும் சிரமமாக உள்ளதாக கூறப்படுகின்றது. இவற்றால் தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. (202)

## 65 இந்து குருமாருக்கு புதனன்று அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

இந்து குருமார்களுக்கு வழங்கவென 65 அடையாள அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மூலம் அடையாள அட்டை பெற விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் வைத்து இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று ஒன்றியம் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (அ-1)

## பால்மா அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறார்களுக்கு வழங்குவதற்கென 5 ஆயிரம் பால்மா பைக்கற்றுக்களை கொழும்பு சுவாமி ராமதாஸ் நிறுவனம் அன்பளிப்புச் செய்தது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையூடாக இந்தப் பால்மா பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

பிரதேச செயலர்களின் உதவியுடன் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள சிறுவர்களுக்கு பால்மா வழங்கப்படவுள்ளது. (202-111)

## புதுமைப்பித்தன் நூற்றாண்டு நிகழ்வு

நல்லூர்,பெப்.26

எழுத்தாளர் புதுமைப் பித்தனின் நூற்றாண்டு நினைவுச் சிறுகதைக் கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் 'குளத்தங்கரை', 'அரசமரம்', 'சாப விமோசனம்', 'சிறிது வெளிச்சம்', 'பாற்கடல்', 'முதற் சம்பளம்', 'கோசலை' ஆகிய சிறுகதைகள் குறித்த கருத்துரைகளை முறையே கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி க.குணராசா, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ. குமரன், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, யாழ்.,பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவு ரையாளர் க. அருந்தாகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வாழ்த்துரையையாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா புதிய உயர்கல்வி நிலைய இயக்குநர் திருமதி ச. அருள்நங்கையும் வரவேற்புரையை உயர்கல்வி நிலைய விரிவுரையாளர் நா. குழந்தைவேலுவும் நிகழ்த்தினார்கள். முன்னதாக திருமதி ச.அருள் நங்கை மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடங்கிவைத்தார்.

கருத்தரங்கில் நிகழ்த்திய உரைகள் மற்றும் கருத்துக்கள் விரைவில் நூலுருவில் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை உருவாக்குவதற்கு இந்தியா இலங்கைத் தலைவர்களுக்கு ஆலோசனை

## குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தகவல்

கோவை, பெப்.26

இலங்கைப்பிரச்சினையில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசியல் தலைவர்களுக்கு இந்தியா யோசனை தெரிவித்துள்ளது என இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தகவல் வெளியிட்டுள்ளார்.

வெலிங்டன் இராணுவ வீரர் பயிற்சிக் கல்லூரியில், பயிற்சி வீரர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வெலிங்டன் இராணுவ வீரர் பயிற்சிக் கல்லூரியில் 23 நாடுகளைச் சேர்ந்த 33 வீரர்கள் இந்திய வீரர்களுடன் இணைந்து பயிற்சி பெறுகின்றனர். இவர்களில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த வீரர் குணவர்த்தன, தெற்காசிய நாடுகளில் அமைதி ஏற்படுத்துவதில் இந்தியாவின் பங்கு குறித்து கலாமிடம் கேட்டார்.

அதற்குக் கலாம் கூறியதாவது:-

பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் பிரச்சினைகளில் இந்தியாவுக்குக் கிடைத்துள்ள அனுபவங்கள் தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த உதவியாக இருக்கிறது.

இலங்கையில், நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் இந்தியா உதவிவருகிறது. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசியல் தலைவர்களுக்கு இந்தியா ஆலோசனை தெரிவித்துள்ளது - என்றார். (ஐ)

# இராணுவ ரீதியில் புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''நிலைமை மோசமானதுதான் ஆனாலும் குகையின் அந்தத்தில் ஒளிக்கீற்று இருக்கவே இருக்கிறது.'' - என்றார் அவர்.

**சமாந்தர அரசியல் தந்திரோபாயம் இலங்கை அரசுக்கு அவசியம்**

''சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்ட தென்னிலங்கை இராணுவத் தீர்வு சாத்தியம் என உணர்கிறது. நாம் அதனுடன் உடன்படவில்லை. தமிழ் சமூகத்தின் ஆதங்கங்களைக் கவனத்தில் கொள்ளும் சமாந்தர அரசியல் தந்திரோபாயம் இல்லாமல் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது.

''சமாந்தர அரசியல் தந்திரோபாயத் திட்டமில்லாமல் இராணுவத் தீர்வு சாத் தியமாகும் என நான் நம்பவில்லை. பயங்கரவாத முறைகளைப் பயன்படுத்தித் தாக்குவதில் புலிகளுக்கு குறிப்பிடத்தக்க வலிமை உண்டு. அதை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இராணுவத் தந்திரோபாயத்துக்காக நாம் ஒரு விலையைச் செலுத்த வேண்டியிருக்கும் என நான் நினைக்கிறேன். நம்பகத் தன்மையுடைய (ஓர் அரசியல்) நடவடிக்கையுடன் வருவதுதான் முக்கியமானது என்பதே எமது கருத்து.

''இராணுவத்தந்திரோபாய வழிகளை இலங்கை இராணுவம் நாடினாலும், இலங்கை சமாதானத்தில் பற்றுறுதி கொண்டுள்ளதாகவே நாங்கள் கருதுகிறோம். அதேசமயம், பேச்சு மூலமான தீர்வில் புலிகளின் நிலைப்பாடு சந்தேகத்துக்குரியதே.

''இராணுவம் இராணுவத் தீர்வையே நம்புகின்றது. ஆனாலும், அமைதி வழித்தீர்வை நாடுவதே அரசின் கொள்கையாக உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தீர்வு யோசனை இல்லாமல் போவதற்கு எதுவு மேயில்லை.

**புலிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அரசு வழங்கவேண்டும்**

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் சமாதானத்தில் பற்றுறுதி உடையவர்களா என்பதை என்னால் கூறமுடியாது. அமைதி வாய்ப்பைப் பயன்படுத்துவதில் அவர்கள் (சீரியஸ்) ஆக இருந்தார்கள் என்று கடந்த இருபது வருட சரித்திரம் எமக்குக் காட்டவில்லை. நல்லெண்ணத்துடன் பேசித் தீர்க்க அவர்கள் தயாரா என்பதைக் காண்பதற்காக அரசு அவர்களுக்கு மிக விரைவில் சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டியிருக்கும்.

''கடந்த வருடம் முதல் மனித உரிமைகள் நிலையும் மோசமடைந்து வருகிறது. அதனால் யுத்தத்தை நிறுத்தி பேச்சுமூல மான தீர்வுக்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் எழுந்துள் ளது.

''அதிகாரப்பகிர்வு யோசனை ஒன்றை உருவாக்கும் நோக்குடன் பெரும்பாலும் எல்லாக் கட்சிகளினதும் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டவை. அமைதியை எட்டுவதற்கான நல்லதொரு வாய்ப்பைத் தந்திருப்பதாக அமெரிக்கா கருதுகின்றது.

**பிரச்சினைக்குத் தீர்வு காண இது ஒரு சந்தர்ப்பம்**

அப்படி எட்டப்படும் யோசனை நம்பகத் தன்மையுடையதாகவும் - குறிப்பாகத் தமிழ் மக்களினதும் அதேவேளை ஏனைய சமூகங்களினதும் - சட்டரீதியான அபிலாஷைகளை நிறைவு செய்வதாகவும் அமையும் என நாங்கள் அதிகளவில் நம்புகிறோம். அந்த யோசனை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கு ஓர் அடிப்படையாக அமைய முடியும்.

''அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது என்பதே மிக முக்கியமானது. ஆகவே அதுபயனுள்ளதீர்வோடு வரவேண்டும். அரசுக்கு நாடாளுமன்றில் பலம் உண்டு. நம்பகமான ஒரு தீர்வுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் ஆதரவும் உண்டு என்பதற்கு பலமான ஆதாரங்கள் உண்டு. அதுதான் மிக மிக முன்னேற்றகரமான அடியாகும்.

ஜெனிவாப் பேச்சு குழப்பத்தில் முடிந்தது. கடைசி ஜெனிவாப் பேச்சில் அமைதிக்கு இணங்கி வராத புலிகளின் போக்கால் மோசமான விளைவுகள் ஏற்பட்டமையை நாம் காணலாம்.

எனவே, மீண்டும் பேச்சு மேசைக்கு இருதரப்பும் செல்லுமானால் பலமான ஊக்குவிப்பு அவற்றுக்குக்கிட்டும் என நாம் நம்புகிறோம்.

**புலிகளின் நாடு ஒன்றை அமெரிக்கா ஆதரிக்காது**

எதிர்காலத்தில், என்ன நடந்தாலும், புலிகளின் நாடு ஒன்றை அமெரிக்கா ஆதரிக்கும் என்று மட்டும் எவரும் கற்பனை செய்யக்கூடாது. புலிகள் தொடர்பாக அமெரிக்கா இறுக்கமான போக்கையே எடுத்துள்ளது - என்றார் தூதுவர் பிளேக். (உ)

# பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்றது. இதில் எந்தவித உண்மையும் இல்லை. இப்படியான ஒரு பிரசாரத்தை நாசகார சக்திகள் மேற்கொண்டிருக்கின்றன.

உயர்கல்வி அமைச்சு கொழும்பில் அண்மையில் கூடியபோது கிழக்கு, யாழ்ப்பாணம், தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களுடைய அபிவிருத்திப் பணிகள் குறித்தும், அதன் எதிர்கால வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதே தவிர கிழக்குப் பல்கலைக்கழகத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் பேச்சு எதுவும் நடைபெறவில்லை.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான தவறான தகவல்களை ஒருசிலர் முடுக்கிவிட்டிருக்கின்றனர். இதுகுறித்து எவரும் அச்சமடையத்தேவையில்லை - என்றார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களை இணைப்பது தொடர்பாக கசிந்த தகவல்களையடுத்து அரசியல் கட்சிகள் பலவும் தமது கண்டனங்களையும் அதிருப்திகளையும் வெளியிட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான நடவடிக்கையில் ஆஸ்திரேலிய அரசு ஈடுபட்டு வருகிறது. இவர்களைப் பாரமெடுத்து 85 இலங்கையர்களையும் இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு ஆஸ்திரேலிய அரசு இந்தோனேஷியா வைக் கேட்டுள்ளது.

இவர்களை இந்தோனேஷியாவிடம் பாரம் கொடுப்பது தொடர்பாக அந்நாட்டிடம் முதற்கட்டமாகப் பேசியுள்ளோம் என்றும் தொடர்ந்து பேசியதன்பின் இது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் ஆஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் கெவின் அண்ட்றூஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் வேண்டுகோளை ஏற்று உதவிசெய்ய இந்தோனேஷியா அரசு தயாராக விருக்கின்றது என்று இந்தோனேஷியாவிற்கான இலங்கைத் தூதுவர் ஜானக பெரேராவை மேற்கோள்காட்டி 'சிட்னி மோர்னிங் ஹெரால்ட்' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# தன்னாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைகிறார்கள். தமிழர்களுக்கு துரோகம் செய்யும் கேடுகெட்ட அரசே இப்போது ஆட்சியில் இருக்கிறது. சரித்திரத்தில் முன்னர் ஒருபோதும் இருந்திராத மோசமான அரசு இப்போதைய அரசு. தமிழர் கடத்தல்கள், படுகொலைகளை அரசின் ஆதரவுடன் ஆயுதக் துணைக் குழுக்களே மேற்கொள்கின்றன.

வெளிநாட்டவர்களுக்கு சமாதானப் பேச்சுக்கு தயார் என்று கூறிக்கொண்டு, இங்கே கடும்போர் நடத்திக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 6 லட்சம் மக்கள் பட்டினியால் சாகிறார்கள். இதற்கு அண்மையில் நெல்லியடிப் பகுதியில் பட்டினியால் ஒருவர் உயிரிழந்திருப்பது எடுத்துக் காட்டாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் நிதானமாக நடந்திருந்தால் இந்த அவலநிலை தமிழர்களுக்கு வந்திருக்கமாட்டாது.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் மாதாமாதம் நீடிக்கப்பட்டு வருகிறது. இதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிக்கிறார்கள். தினமும் கடத்தல்கள், கொலைகள் நடக்கின்ற இவ்வேளையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசர காலச்சட்டத்திற்கு ஆதரவு அளிப்பது வேதனைக்குரிய விடயமாகும். எதிர்க்கட்சிகள் அரசிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால், நாங்கள் அதற்கு ஆதரவளித்து இந்த அரசை வீழ்த்துவதுதான் ஒரே வழியாகும்.

தற்போதுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை ரணிலைவிட வேறு எந்தச் சிங்களத் தலைவரும் செய்திருக்கவே மாட்டார்கள். எனவே, தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமென்றால் இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தி - ஏ - 9 தரைவழிப் பாதையைத் திறந்து - விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையின்றி - தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சை முன்னகர்த்த வேண்டும். இல்லையெனில் இந்த அரசு மாறவேண்டும் - என்று விநாயகமூர்த்தி வலியுறுத்தியிருக்கிறார். (ஐ)

# மாணவர்கள் இருவரை காணவில்லை

நெல்லியடி, பெப்.26

உடுப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு பாடசாலை மாணவர்கள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையைச் சேர்ந்த பூபதிதாஸன் சசீதரன் (வயது15), குணசேகரலிங்கம் சிவரூபன் (வயது15) ஆகியோர் தனியார்கல்விநிலையத்திற்கு சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் காணாமற்போனதாக அறியப்படுகின்றது. (அ-115)

# சகல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதனைத் தடுப்பது குறித்து அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் வி.சிவசுவாமி, வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், விலைக் கட்டுப்பாடு பகுதி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்போது, மூன்று தனியார் வர்த்தகர்கள் கப்பல்கள் மூலம் பொருள்களைக் குடாநாட்டுக்குக் கொண்டுவருகின்றனர். அவர்களுடனும், அரசாங்க அதிபருடனும் கலந்தாலோசித்து அவற்றைக் கட்டுப்பாடு மற்றும் நியாய விலைகளுக்கு விற்பனை செய்வது குறித்தும் ஆராயப்பட்டது.

இதுகுறித்து அடுத்த வாரம் நடைபெறும் கலந்துரையாடலில் ஒரு முடிவை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(மஹிந்த ராஜபக்ஷவுக்கும்) இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் தெளிவாகக் கூறியிருந்தார்.

இந்திய மத்திய அரசு தமிழ் நாடு போன்ற அதன் மாநில அரசுகளைப் புறக்கணிக்கும் வகையில் எதனையும் செய்யாது என்பதை நாம் உணரவேண்டும்.

அந்த மாநில அரசுகளின் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தான் இந்தியாவை உலக வரைபடத்தில் உயர்த்தி வைத்துள்ளது.

இலங்கைக்கு அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை வழங்குவதில்லை என்று காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தமிழ் நாடு முதல்வர் கருணாநிதியிடம் கூறியுள்ளார். இது இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே, நாம் விரைந்து தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லையென்றால் இந்தியா மேற்குத்தேச நாடுகளுடன் இணைந்து இலங்கை மீது தடை விதிக்க முற்படலாம் - என்று அக்கடிதத்தில் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதன் பிறேமளாதேவி



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் பிறேமளாதேவி 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா இராமநாதன் (மாகாணப் பணிப்பாளர் NAITA யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா ஆசிரியர் (சரவணை) மற்றும் கண்மணிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் யுகேந்திரன் (A/L உயிரியல் பிரிவு), தனுஷன்(7B), தனுகரன்(5B - பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயந்தியின் சகோதரியும் ஆரணி, தீபா ஆகியோரின் அன்புச் சித்தியும் சிவராஜா, திருமதி திருமகள் குமாரவேலு, வாசுகி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**39, விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**
P.N. 021 222 6344. (58339)

தகவல்:
**கணவர், தாய், பிள்ளைகள்.**

## அருளப்பு துரைசிங்கம் (பெனடிற்)

(ஓய்வுபெற்ற ஊழியர் - புகையிரத நிலையம்)

சென்பீற்றர்ஸ் வீதி நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு துரைசிங்கம் நேற்று (25.02.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அக்கினேஸ் அம்மாவின் (வசந்தா) அன்புக் கணவரும் M.R.S. இலங்கேஸ்வரன், ஜெயச்சித்திரா (ஆசிரியர் - சென். பீற்றர்ஸ் நவாலி), அன்ரன் ஜெய்க்கிஷன் (சவுதி), M.R.S.ஜெயப்பிரியா, நிமால் ஜெய்க்கிஷன் (மதுவரி உத்தியோகத்தர்) ஆகியோரின் தந்தையும் இலங்கேஸ்வரன் (RDD, யாழ்ப்பாணம்), ஜெபச்செல்வன் (DS Office, தம்பலகாமம்) ஆகியோரின் மாமனும் ஜெகநாதன் மேரிநாயகியின் சகோதரனும் டெஸ்மிக்கா, பிராங், செர்வின் ஆகியோரின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சென்.பீற்றர்ஸ் வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

தகவல்:
**நிமால் ஜெய்க்கிஷன் (மகன்).**

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் தியாகராஜா

(Port Authority - Rtd. C.C. Trincomala)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தியாகராஜா 13.02.2007 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - செல்லம்மாவின் மகனும், V.H.லேன் இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை, மனோன்மணி ஆகியோரின் மருமகனும், இராசலக்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசிந்தாமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் நாகேஷ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் லண்டனை வசிப்பிடமாக கொண்டவர்களான கணேஷராஜு, ராஜினி, உமாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரகுநாதன் மகேந்திரன் ஆகியோரின் மாமனும் நிவோஷன், மஹிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2007 அன்று திருகோணமலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**36, புதிய சோனக தெரு,**
**திருகோணமலை.**
**026 22 20776**

தகவல்:
**சகோதரி**
**G.S.P வீதி, கல்வியங்காடு.**

## திருமதி திலகவதி கெங்கராஜா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்கராஜா திலகவதி 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற த.கெங்கராசாவின் (P.W.D.ஓவசியர்) அன்பு மனைவியும் விஜயராகவன் (சிங்கப்பூர்), சுரேஸ் (சுஜா), பிறதாபன் (நோர்வே), திருமதி ப.வனஜா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, செல்வநாயகம், குலவீரசிங்கம், மகேஸ்வரி (USA), பரமேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா, கனகலிங்கம், முருகேசபிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பற்குணநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி இ.டேஸ்சிராணி (சிங்கப்பூர்), கலாதேவி, கலாநிதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆரானி, குமரேசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2007) நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.பற்குணநாதன் (மருமகன்),**
**திருமதி ப.வனஜா (மகள்)**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org